## திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

### மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஆக. 7 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, ஆகஸ்ட் 7 இன்று காலை 10.30 மணிக்கு அண்ணா ஸ்டேடியம் ரவுண்டானா முதல் டி.வி.எஸ். டோல் கேட் வரை அமைதி பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதையை செலுத்த உள்ளோம்.

இந்த நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

## கரூர் மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் : வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.அறிவிப்பு!

கரூர், ஆக. 7 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று கரூர் மாவட்டம் முழுவதும் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கரூர் மாவட்ட கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) மாவட்ட கழக அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 07.08.2025 இன்று கரூர் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள், வார்டு, கிளைக் கழகங்களில் அந்தந்த பகுதிகளிலும், மற்றும் மாவட்ட சார்பு அணிகள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்களில் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், பூத் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, பூத் ஐ.டி. விங்க்(BDA) பாக முகவர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்வதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

அறிவை வளமாக்கும் கல்வியும் உடலை நலமாக்கும் மருத்துவத்தையும் இருகண்களெனப் பார்த்துப் பார்த்து, நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்களை உருவாக்கி, பொது மக்கள் தங்களின் உடல்நலனைப் பரிசோதித்து, தரமான மருத்துவத்தால் நலமாக வாழ வைக்க வழிவகை செய்திட்ட திராவிட நாயகன், தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்திடும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாகவும், கரூர் மாவட்ட மக்களின் சார்பிலும் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

அரசு அலுவலகங்களுக்குக் கோரிக்கை மனுக்களுடன் மக்கள் சென்ற நிலையை மாற்றி, அவர்களின் வீடுகளுக்கே அரசு அலுவலர்கள் சென்று தீர்வுகளை தரும் நிலையை உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னோடித் திட்டத்தின் மூலம் உருவாக்கி தந்திருக்கும் எல்லார்க்கும் எல்லாம் எனும் நம் திராவிடமாடல் அரசின் திட்டங்களும், சேவைகளும் ஒவ்வொரு தமிழ்நாட்டு இல்லங்களுக்கும் சென்று சேர வழிவகை செய்திட்ட நம்முடைய கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாகவும், கரூர் மாவட்ட மக்களின் கோடான சார்பிலும் கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை கரூர், அரவக்குறிச்சி. கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் சராசரியாக 60 விழுக்காடு உறுப்பினர் சேர்க்கையில் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்ட கரூர் மாவட்ட மக்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறு பான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ண ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே. கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி கே. டி. ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே. சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம். சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர். எஸ்.ராஜா, ஆர்.ஜோதி பாசு, வி.ஜி.எஸ்.குமார், வெங்கமேடு பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என்.மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், சி.கதிரவன், எல்.கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ.ராமர் (முன்னாள் எம்.எல்.ஏ.), ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர்.மோகன்ராஜ், ம இ. ரவீந்திரன், எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ.அறி வழகன். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## நாட்டில் பணப்புழக்கம் எவ்வளவு உள்ளது

# பொதுமக்களின் அன்றாடத் தேவைக்கு குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் திட்டம் உள்ளதா?

### மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக 7 -

நாட்டில் பணப்புழக்கம் எவ்வளவு உள்ளது என்றும், பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காக குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை அச்சடித்து புழக்கத்தில் விட திட்டம் உள்ளதா என்றும் ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் கிரிராஜன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



ஜூன் 30ஆம் தேதி நிலவரப்படி நாட்டின் நாட்டின் ரொக்க இருப்பு மற்றும் பணப்புழக்கத்தின் நிலை என்ன? பணப்புழக்கத்தின் பயன்பாட்டை ஒன்றிய அரசு கட்டுப்படுத்திகிறதா? புழக்கத்தில் உள்ள பணத்தின் மதிப்பு 37 லட்சம் கோடியைத் தாண்டிவிட்டதா? பொதுமக்களிடம் பணப்புழக்கம் பெருமளவில் அதிகரிக்க காரணம் என்ன? குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்தில் விட திட்டம் உள்ளதா? என்ற கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி ஒன்றிய அரசின் நிதி அமைச்சரிடம் திமுக எம்.பி. இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

கிரிராஜனின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள நிதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) விவரங்களின்படி அதனிடமுள்ள மொத்த கையிருப்பு ரூ. 49,23,705 கோடியாக உள்ளது என்றும், பணப்புழக்கத்தின் மதிப்பு ரூ. 38,20,866 கோடியாக உள்ளது என்றும், பொதுமக்களிடம் உள்ள பணத்தின் மதிப்பு ரூ. 37,22,292 கோடியும், வங்கிகளில் உள்ள வைப்புத்தொகையின் மதிப்பு ரூ. 2,43,46,478 கோடியும் சேர்ந்த பொதுமக்களின் பணத்தின் மதிப்பு ரூ. 2,81,77,467 கோடி என்றும் பதில் அளித்துள்ளார்.

மேலும், வெளிப்படையான, திறமையான, கட்டுப்பாடான நிதி சூழலை உருவாக்கும் முயற்சியில், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கும், அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு ரொக்கப் பயன்பாட்டைத் தடுப்பதற்கும், வருமான வரிச் சட்டம், 1961 சட்டம் உள்ளிட்டவற்றில் திருத்தங்களை அரசாங்கம் செய்துள்ளதாகவும் ஒன்றிய இணை அமைச்சர் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

2025 ஜூன் 27ஆம் தேதி அறிக்கையின் படி,ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், டிஜிட்டல் ரூபாய் ஆகியவை சேர்த்து ரூ. 38,20,866 கோடி அளவிற்கு புழக்கத்தில் இருப்பதாகவும் விவரத்தை வழங்கியுள்ளார்.

குறைந்த மதிப்புள்ள 10, 20, 50 ரூபாய் நோட்டுகளுக்கான தேவை என்பது ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்களை இணைப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாகவும், அவற்றை அச்சிடுவது குறித்து ரிசர்வ் வங்கியுடன் ஒன்றிய அரசு கலந்தாலோசித்து, முடிவெடுப்பதாக, திமுக எம். பி. கிரிராஜனின் கேள்விக்கு இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

# உலகெங்கும் கலைஞர் புகழ்!



அய்யா கலைஞரே
நினைக்காமல்
இருப்பதில்லை!
உன் நினைவைத் தவிர
வேறு நினைவில்லை !

படித்துபாதியில்
நிறுத்திய நூல்கள்
உன் கண்களைத்
தேடுகிறது !

சலவைக்கு
சென்ற
வேட்டியும் சட்டையும்
உடுத்துவாய் என்று உன்னைத் தேடுகிறது!

ரேகைகளை
உள்வாங்கிய
அறிவாலயம்
உன் பாதங்களைத்
தேடுகிறது !

அலைகள்
கைகளைத்தட்டி
செல்கிறது
கல்லறைக்குள்ளும்
கவிதைப் பேசுகிறாய் !

அணைந்தப் பிறகும்
முரசொலியில்
நெருப்பு
வீசுகிறாய் !

திரைப்பட
நட்சத்திரங்கள்
மயங்கும்
மந்திரப் புன்னகை !

இளமைப் பலி
முதல்
ஒவ்வொரு
படைப்பும்
பொன் நகை !

தமிழின்
ஊர்வலமே.!
தத்துவத்தின்
நகர்வலமே.!

பொய் வழக்குகள்
உன் கை விரல்களை
நட்டை எடுத்தது !

அடக்கு முறையும்
சிறையும்
உன்னிடம் தேனீர் குடித்தது !

ஈரோட்டு
தீயின் சிறகே!
காஞ்சியின்
கருணைப் படகே !

எழுதவா
எழுந்து வா
என்று
தேடுகிறது உன் பேனா !

இறந்தப் பிறகு
உன்னிடம் மோதியவன்
ஆனா !

இறந்தப் பிறகும்
எதிரிகளைக் கதறவிட்டு
வென்றாய் ஆனா !

மொத்தப்பகைவரை
உன் ஒத்த மகன்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெல்லுகிறார் !

அய்யா கலைஞரே
ஒன்றியமெங்கும்
உன் புகழை
சொல்லுகிறார் !

ஆதிக்கச் சாதியிடம்
குனியாத
மு.க. ஸ்டாலினுக்கு
நிகர் எவர் !

எவரும் தொட முடியாத
அணுமின்
நிலையத்தின்
பவர் அவர் !

தலைவா
நினைவு நாளில்
தலைவரோடும்
உன் பேரனோடும்
நின்று
வணங்குகிறோம் !

உன்னோடு
வாழ்ந்த நாட்களுக்கு
பூக்களைத்
தூவுகிறோம்!

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



## நாமக்கல்லில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதிப் பேரணி!

### நாமக்கல் மாநகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், செ.பூபதி, அ.சிவக்குமார் அறிவிப்பு!

நாமக்கல், ஆக. 7 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாமக்கல்லில் மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என்று மாநகரச் செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், செ.பூபதி, அ.சிவக்குமார் ஆகியோர் கூட்டாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராகவும், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும் விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்களின் நினைவை போற்றும் வகையில் இன்று (07.08.2025 -வியாழக் கிழமை) காலை 08.00 மணி அளவில் நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து பரமத்தி சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலை வரை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமையில் அமைதி பேரணி சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.

இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநகர உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.